தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au

பேச்சுப் போட்டி 09-06-2018 ஆண்டு:- ஆறாம் வகுப்பு

இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

**தேசபக்தி**

எமது தாய் நாடு நாம் வாழும் நாடு ஆகியவற்றில் எமக்கிருக்கும் பற்றுதல் மரியாதை என்பன தேசபக்தியாகும். இதை நாட்டுப்பற்று என்றும் கூறலாம். நாட்டுப்பற்று என்று கூறும் போது அந்த நாட்டின் மொழி, கலாச்சாரம் அங்கு வாழும் மக்கள் மீது கொண்ட பற்றுதலைக் குறிக்கும்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவானிலும் நனி சிறந்தனவே" என்பது முது மொழி.

ஆம்! இந்த உலகில் தாயின் அன்பிற்கு ஈடாக ஒன்றுமில்லை. இந்த அன்பிற்கு இணையாக எமது தாய் நாட்டிலும் பற்றுதல் உள்ளவர்களாக நாம் வாழவேண்டியது அவசியமாகும்.

புராதன கால வாழ்கை அமைப்பில் பிறந்த நாடே வாழும் நாடாகவும் இருந்தது. அந்நிய மொழி, அந்நிய கலாச்சாரக்கலப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. இதனால் இயல்பாகவே பிறந்த தேசத்தில் பக்தி இருந்தது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் பொருளாதாரம், காலநிலை, போர் நடவடிக்கைகள் காரணமாக மக்கள் உலகமெங்கும் சிதறி வாழ்வதால் பல்லின காலாச்சாரக் கலப்புக்கள் இலகுவாக ஏற்பட்டு நாட்டுப்பற்றும் அருகி வருகிறது. இதனால் இனத்தின் அடையாளம் தொலைந்து போகும் அபாயம் ஏற்படுகிறது.

தாய் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து இன்று அவுஸ்ரேலியாவில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் வாழும் நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் பொதுச் சொத்துக்களைக் கவனமாகவும், நன்றியுடனும் பயன் படுத்தும் நற்பிரஜைகளாக வாழவேண்டும். அத்துடன் எமது தாய் நாட்டையும் தாய் மொழியாகிய தமிழையும், எமது கலாச்சாரத்தையும் மிகவும் பயபக்தியுடன் பேணிப் பாதுகாக்க வேண்டியதும் அவசியமாகும்.

"வேரோடி விழாத்தி முளைத்தாலும் - தாய் வழி தப்பாது" என்பதற்கிணங்க நாம் எவ்வளவு தான் பல்திறன்கள் பெற்று வாழ்க்கைத் தரத்தில் உயர்வு பெற்றாலும், எமக்கிருக்கும் உருவம், நிறம் எமது இனத்தை வேறு படுத்தியே நிற்கும். எனவே,

நாம் தமிழர், எமது மொழி தமிழ் என்பதை பெருமையுடன் பறை சாற்றக் கூடியதாக தேச பக்தியுடன் வாழ்ந்து எமது அடையாளத்தைப் பேணிப் பாதுகாப்போமாக.

நன்றி வணக்கம்.